**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 83/2026**

**Dated: 21.05.2026**

**Deposition of Witnesses for PW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.விக்னேஷ்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 18.01.2026 அன்று இளையான்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது காவல் சார்பு ஆய்வாளர் திரு.சிவசுப்பு என்பவருக்கு காலை 11.30 மணிக்கு நிலையத்தில் இருந்த போது நிலையத்திற்கு வந்த ரகசிய தகவலாளி இளையான்குடியில் சாலையூர் செல்லும் புறவழிச்சாலையில் உள்ள ஊரணி அருகே உள்ள கருவை காட்டில் சிவகங்கை மாவட்டம் இந்திரா நகரைச் சேர்ந்த பிரபு மகன் மணீஷ் கஞ்சா விற்பனை செய்வதாக சார்பு ஆய்வாளரிடம் நேரில் தகவல் சொன்னார். இந்த தகவலை 11.40 மணிக்கு நிலைய பொது நாட்குறிப்பில் சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். பின்பு

உயரதிகாரியான நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடம் போன் மூலம் சார்பு ஆய்வாளர் தகவல் கூறி பின்பு 11.45 மணிக்கு இளையான்குடி என் மூலம் தபால் வழியாக ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு 12.00 மணிக்கு வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் இளையான்குடி காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் தலைமையில் நானும் மற்றும் என்னுடன் பணியாற்றும் தலைமை காவலர் திரு.ரவிக்குமார் சார்பு ஆய்வாளர் திரு.சிவசுப்பு மற்றும் தகவலாளியுடன் காவல் நிலைத்திலிருந்து புறப்பட்டோம். பின்பு ரகசிய தகவலாளி இளையான்குடி To சாலையூர் செல்லும் புறவழிச்சாலை ஊரணிகரை அருகே உள்ள கருவைக்காட்டில் மேற்படி மணீஷ் என்பவரை 12.15 மணிக்கு அடையாளம் காட்டிய பின்பு அந்த இடத்தை விட்டு சென்று விட்டார். பின்பு எங்களது போலீஸ் பார்ட்டியை பார்த்தவுடன் கட்டை பையுடன் நின்று கொண்டிருந்த நபர் தப்பித்து செல்ல முயன்றார். மதியம் 12.20 மணிக்கு அவரை சுற்றி வளைத்து பிடித்தோம். பின்பு அவரிடம் சார்பு ஆய்வாளர் ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டபோது முன்னுக்கு பின்னாக கூறினார். பின்பு அவரே தான் சிவகங்கையை சேர்ந்த மணிஷ் என்று தெரிவித்தார். அவரிடம் நீங்கள் கஞ்சா விற்பதாக எங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனால் தங்களை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்யலாமா என சார்பு ஆய்வாளர் கேட்டபோது அவர் நீங்களே என்னை சோதனை செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்தார். பின்பு மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடத்தில் சம்மத கடிதம் ஆய்வாளர் தயார் செய்து என்னுடன் வந்த காவலர்கள் ரவிக்குமார் மற்றும் சண்முகவேல் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள். பின்பு எதிரியும் கையொப்பம் செய்தார். அதற்கான **சோதனை**

**செய்வதற்கான அறிவிப்பு கடிதம் அதசாஆ.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **சோதனை செய்ததற்கான சம்மத கடிதம் அதசாஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு இந்த தகவலை இளையான்குடி வடக்கு VAO இளஞ்செழியன் அவர்களுக்கு ஆய்வாளர் தகவல் கூறியதன் பேரில் 13.35 மணிக்கு VAO இளஞ்செழியன் மற்றும் அவருடன் தலையாரி திரு,செந்தில் அவர்களும் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்களின் முன்பு எதிரி மணிஷ் கஞ்சா விற்பனை குறித்து ஆய்வாளர் விசாரித்தார். பின்பு எதிரி தானாக முன்வந்து அவர் வைத்திருந்த கட்டை பையை திறந்து காட்டியதில் அதில் பச்சை மற்றும் பழுப்பு நிற இலை, தழை, காம்புகள் இருந்தன. அதனை ஆய்வாளர் எடுத்து கையில் வைத்து நசுக்கி முகர்ந்து பார்க்கும் போது கஞ்சா வாடை வந்தது. பின்பு நாங்கள் கொண்டு சென்றிருந்த எடை தராசில் அளவீடும் போது 3 கிலோ கஞ்சா இருந்தது. பின்பு 14.00 மணிக்கு சம்பவ இடத்தில் VAO மற்றும் தலையாரி முன்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 14.40 மணிக்கு எதிரியை தக்க காரணம் கூறி உச்ச நீதிமன்ற 11 அம்ச கட்டளை பின்பற்றி அவர்கள் வீட்டிற்கு தகவல் சொல்லி கைது அறிவிப்பு கொடுத்து சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் கைது செய்தார். அதற்கான **கைது அறிவிப்பு கடிதம் அதசாஆ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15.00 மணிக்கு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை VAO இளஞ்செழியன் மற்றும் தலையாரி முன்பு சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். எதிரியும் அதில் கையொப்பம் செய்தார். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் பிரிவு 57-

ன் NDPS படியான தனி அறிக்கை தயார் செய்து காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்த நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ரகசிய தகவல் 11.30 மணிக்கு கிடைத்து தபால் தயார் செய்து காவல் ஆய்வாளருக்கு அனுப்பி 11.45 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து நான் கிளம்பியது 12.00 மணி என்பதால் அந்த இடைப்பட்ட 30 நிமிடங்களில் நிலைய பொது நாட்குறிப்பில் வேறு என்னென்ன விவரங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் அது குறித்து பொது நாட்குறிப்பினை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடமான இளையான்குடி புறவழிச் சாலை கருவகாடு முட்புதர் செல்ல எவ்வளவு நேரம் கிடைத்தது என்றால் சுமார் 1 மணி நேரம் ஆகும். காவல் நிலையத்திலிருந்து 12.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொறுத்து எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன். 12.20 மணிக்கு எதிரியை சம்பவ இடத்தில் பிடித்து விட்டதாக கூறுகிறேன் என்றால் சரிதான். பிரிவு 50 NDPS சட்ட பிரகாரம் சோதனை சம்மத கடிதம் 12.30 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் சம்பவ இடத்திற்கு வந்தது மதியம் 1.35 என்று சொன்னால் சரிதான். இந்த ஒரு மணி நேர காலத்திற்குள் எதிரியையும் அவர் வைத்திருந்ததாக கூறப்படும் கஞ்சா பையையும் எங்கு எப்படி வைத்திருந்தோம் என்றால் அதே இடத்தில் தான் வைத்திருந்தோம். VAO அங்கு வருவதற்கு முன்பாக நாங்கள் ஏன் சோதனை ஆரம்பிக்கவில்லை என்றால் முதலிலேயே சோதனை செய்யப்பட்டது. VAOவை சம்பவ இடத்திற்கு வரவழைக்க

யார் மூலம் எப்படி தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சார்பு ஆய்வாளர் சிவசுப்பு அவர்கள் போன் மூலமாக VAOக்கு தகவல் தெரிவித்தார். எனது வாக்குமூலத்தில் 12.30 மணிக்கு எதிரியிடம் பிரிவு 50(1)ன்படி சோதனைக்கு சம்மதம் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான சம்மத கடிதம் அதசாஆ.2 ல் கையெழுத்திட்டது யார் என்றால் ரவிக்குமார் மற்றும் சண்முகவேல் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். கஞ்சாவை எடை போட்ட எலக்ட்ரிக் தராசு காவல் நிலையத்திலிருந்து தான் கொண்டு வரப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கஞ்சாவிற்று P1 என்று குறியீடு செய்து சார்பு ஆய்வாளர் சீல் வைத்தார் என்று உள்ளது என்றால் அந்த சீல் என்ன வடிவத்தில் இருந்தது என்றால் அரக்கு சீல் வட்ட வடிவில் வைக்கப்பட்டிருந்தது. மதியம் 3.00 மணிக்கு எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். போலீஸ் காவலில் இருக்கும் போது எழுதப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி செல்லாது என்று அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சொல்லசொல்ல எழுதியது நான் எழுதவில்லை வேறொரு காவலர் எழுதினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மடிகணிணியில் தட்டச்சு செய்தது யார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தட்டச்சு செய்யப்பட்ட பிரிண்ட் சம்பவ இடத்திற்கு எப்படி கொண்டுவரப்பட்டது என்றால் லேப்டாப், தராசு, அரக்கு சீல், பேப்பர் எல்லாம் ரைடுக்கு கொண்டு சென்றோம். பிரிண்ட் அவுட் எப்படி எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. மதியம் 3.00 மணிக்கு வாக்குமூலம் மற்றும் மகஜர் அனைத்தும் தயார் செய்து முடித்து விட்டு காவல் நிலையம் வந்து சேர்ந்தது மாலை 5.00 மணி என்றால்சரிதான். இளையான்குடி to சாலையூர் புறவழிச்சாலையிலிருந்து

காவல் நிலையத்திற்கு வர 2.00 மணி நேரம் ஆனதற்கு உண்டான காரணம் என்னவென்றால் பைக்கில் மெதுவாக வந்தோம். இடைப்பட்ட நேரத்தில் வேறு எங்கேயும் சென்றோமா என்றால் இல்லை. பறிமுதல் செய்ய பயன்படுத்தப்பட்ட எலக்ட்ரானிக் தராசு, Legal Metrological Act (முத்திரையியல் சட்டம்) படி மறு அளவீடு செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டதா என்றால் அது குறித்து காவல் நிலையத்தில் நிறுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 3 கிலோ என்பது கஞ்சா மட்டும் தானா அல்லது கஞ்சா வைத்திருந்து பையையும் சேர்த்து எடை 3 கிலோவா என்றால் கஞ்சா மட்டும் 3 கிலோ ஆகும். கஞ்சாவை தனியாகவும் கஞ்சா வைத்திருந்த பையை தனியாகவும் எடை போட்டு பார்த்தோமா என்றால் இல்லை. கஞ்சா செடி இலை, தலை, காம்பு விதைகள் அனைத்தும் கலந்த கலவையாக இருந்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். NDPS சட்டப்படி கஞ்சா என்பது இலைகள் மற்றும் விதைகள் இல்லாத பூக்கள், மொட்டுக்கள், காய்கள் என்றால் சரிதான். நாங்கள் இலை, தலை, காம்பு மற்றும் கட்டை பையுடன் சேர்த்து 3 கிலோ என்று காட்டியுள்ளதால் அதில் உண்மையான கஞ்சாவின் அளவு மிக குறைவு என்பது தான் உண்மை என்றால் சரியல்ல. அளக்கும் போது 3 கிலோ இருந்தது. சம்பவ இடம் அருகே ஒரு ஊரணி இருந்தது என்றால் சரிதான். அந்த ஊரணிக்கு எந்த திசையில் சம்பவம் நடந்தது என்றால் வடக்கு திசையில் நடந்தது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இவ்வழக்கில் எதிரி மணிஷ் என்பவர் சம்பவ இடத்தில் இல்லாமல் வேறு இடத்தில் வைத்து வேறு வழக்கிற்காக அவரை காவல் நிலையம் அழைத்து வந்து எனது மேல் அதிகாரியின் வேண்டுதலின் பேரில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.